LIBRARY
26 SEP 1960
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Thursday, 14th April 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past ten of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Rebate for Weavers' Co-operative Societies

* 659 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கிழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிபேட் கொடுக்காமல் இருப்ப தற்குக் காரணம் என்ன ?

(1) ஒரு வருட காலமாக, (2) இரண்டு வருட காலமாக எத்தனை சொசைட்டிகளுக்கு ?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[a] is placed[a] on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டில் இரண்டு வருடம் மூன்று வருடம் காலமாக ரிபேட் கொடுக்கப்படாத சொஸைட்டிகளின் லிஸ்ட் இருக்கிறது. இதில் ஒரு வருட காலத்திற்கு கொடுக்கப்படாமல் இருப்பது எத்தனை ? அவைகளினுடைய பெயர்கள் என்ன என்பதை சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் போட்டிருக்கக்கூடிய கேள்வியில் இந்த விவரத்தைப் பற்றிக் கேட்கவில்லை. ஒரு வருடம் இரண்டு வருடம் கொடுக்கப்படாமல் இருக்கும் சொஸைட்டிகளுடைய கணக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இரண்டு வருட காலம், மூன்று வருட காலம் இப்படியாக சொஸைட்டிகளில் ஏற்படக்கூடிய ஊழல்களைப் பற்றி பரிசீலனை செய்து முடித்தால், உடனுக்குடன் அவர் களுக்கு ரிபேட் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து அதன் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்க முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டு வருடம் மூன்று வருடம் என்று கொடுக்கப்படாத சொஸைட்டிகள் என்று சொன்னார்கள். இவ்விதம் மூன்று வருடம் கொடுக் கப்படாமல் இருக்கின்ற சொஸைட்டிகள் ஒன்றும் இதில் கிடையாது. இரண்டு வருட காலமாக தாமதிக்கப்பட்டு இருக்கின்ற சொஸைட்டிகள் எட்டு, இந்த ராஜ்யத்தில் இதன் கீழ் இருக்கக்கூடிய சொஸைடிகள் 1000. இதில் இந்த எட்டு சொஸைட்டிகளும் தவறு செய்த காரணத்தினாலும், தவறாக ரிபேட் கோரிய காரணத்தினாலும் பரிசீலனை செய்வதற்கு கால தாமதம் ஆகிறது. இதில் சொஸைடிகள் ஒத்துழைக்காமல் இருப்பதும் காலதாமதம் ஆவதற்கு முக்கியமான காரணம். சில சொஸைட்டிகளில் ஏதாவது கிரிமினல் பிராஸிக்யூஷன் வந்து விடுமோ என்று பயந்து கணக்குகளை ஒழுங்காக காண்பிக்காமல் இருப்பதோடு நம்மோடு ஒத்துழைப் பதில்லை. இதன் காரணமாக காலதாமதம் ஏற்படுகின்றது.

---

a Printed as Appendix I on pages 73–74 infra.

[14th April 1960

SRI A. VEDARATHNAM : ஸார், தவறு செய்த பல சொஸைட்டிகளின் கணக்கு இன்னும் பரிசீலனையில் இருப்பதாக இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக ஐந்தாவது திட்டத்தில் திண்டுக்கலில் உள்ள சொஸைட்டிக்கு "ரிபேட் ரிஜக்ட்" செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் ரிஜக்ட் செய்வது மட்டும்தானா, அதல்லாமல் இதில் தவறு செய்தவர்கள் பேரில் கிரிமினல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா ? இனிமேல் இம்மாதிரியான தவறுகள் நடக்காமல் இருக்கும் பொருட்டு 'fool-proof 'ஆக இருக்கும் விதத்தில் ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : திண்டுக்கல்லைப் பொறுத்த மட்டில் "க்ளெய்ம்" பண்ணினதை நிராகரித்து விட்டோம். மேற்கொண்டு இதில் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இதற்கு வேண்டிய எவிடன்ஸ் (சாட்சியம்) கிடைப்பதைப் பொறுத்துத்தான் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டி யிருக்கிறது. அதல்லாமல் 'fool-proof' இருக்கவேண்டுமென்றால் ரிபேட் கொடுப்பதை எடுத்துவிட வேண்டியதுதான்.

SRI K. RAMACHANDRAN : Sir, it is stated in the statement that enquiries regarding the genuineness of rebate claims are pending. May I know whether they involve any cases of misappropriation in the case of these societies, and, if so, the action taken by the Government in the matter ?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, there is no case of misappropriation. On the other hand, these are all cases of fraudulent claims for enhanced rebate and Government have not paid them. We are only examining the claims and rejecting them.

SRI A. A. RASHEED : SIR, what is the total amount of money that is to be distributed, and in respect of which, investigation is pending ?

THE HON. SRI R. VENKATARAMAN : That will depend upon genuine claims due to the society.

SRI A. GOVINDASAMY : 1958-லிருந்து விசாரணையில் இருப்பதாக சொல்லப்படுகிறது. இவ்விதம் காலதாமதம் ஆகின்ற காரணத்தினால் பின்னால் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய தொகையை ஜெனுயின் கேஸ் என்று தெரிந்துகொண்ட பிறகும் கொடுத்துவிடாமல் இருந்து விடுவார்களா அல்லது, திருப்பி கொடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்தெந்த கேஸில் யார் யாருக்கெல்லாம் உண்மையாக எவ்வளவு கொடுக்கவேண்டுமோ அது நிச்சயமாகக் கொடுக்கப்படும்.

SRI M. KALYANASUNDARAM : இம்மாதிரிப்பட்ட விசாரணை முடியாத காரணத்தினால் சொஸைட்டிகளுக்கு சென்ட்ரல் பாங்கியிலிருந்து பண உதவி கிடைப்பதும் தாமதமாகிறது. ஆகவே இம்மாதிரிப் பட்ட கேஸ்களை துரிதமாக தீர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : சொஸைட்டிகள் ஒத்துழைத்தால்தான் இவைகளை துரிதமாக தீர்க்க முடியும். கேட்கின்ற பொழுது கணக்குப் புத்தகங்களை காண்பிப்பதில்லை. கேட்கின்ற புள்ளி விவரங்களை எல்லாம் சரியானபடி கொடுப்பதில்லை. இதன் காரணமாக துரிதமாக நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. மொத்தம் 1,000 சொஸைட்டிகளில் எட்டு சொஸைட்டிகளும், அதோடு ஏழு சொஸைட்டிகளும் ஆக பதினைந்து சொஸைட்டிகள்தான் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகள்

14th April 1960]

தவறுகள் செய்ததற்காக கொஞ்சம் கஷ்டம் அனுபவிக்கத்தான் வேண்டியிருக்கின்றன. இதைப் பார்க்கிற மற்ற சொஸைட்டிகள் ஒரு பாடமாக இதை எடுத்துக்கொள்ளும் என்று நினைக்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : ஸார், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஏறத்தாழ 49 சொஸைட்டிகள் போகஸ் "க்ளெய்ம்" பண்ணினதற்காக அதன் பேரில் விசாரணை செய்யப்பட்டு வருவதாக தெரிகிறது. இந்த விசாரணையை துரிதமாக முடிப்பதற்கு அரசாங்கம் தனி கவனம் செலுத்துமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I have already answered the question, Sir.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : As there are only a few such cases, will the Government consider the desirability of appointing a Special Officer and finalizing these things as early as possible ?

THE HON. SRI R. VENKATARAMAN : That has already been done and that is how cases have been reduced to such a small number.

MR. SPEAKER : As some more hon. Members want to put questions, I shall allow a few more supplementaries.

SRI K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கத்தின் மேல் ஆண்டுதோறும் கணக்குகளை தணிக்கை செய்கின்ற போதே ஒவ்வொரு சங்கத்தின் "ரிபேட்"டுக்காக இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்துவிட முடியாதா, அவ்விதம் செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இதில் எவ்வாறு எல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்பது தெரியாது என்று எண்ணுகிறேன். அதனால்தான் இந்தக் கேள்வியை கேட்டிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். வாங்காத நூலை வாங்கியதாக கணக்கெழுதி, நெய்யாத நூலை நெய்ததாக கணக்கெழுதி, கொடுக்காத கூலியை கொடுத்ததாக கணக்கெழுதி, விற்காத துணியை விற்றதாக கணக்கெழுதிக் கொடுத்து விடுகின்றார்கள். அதனால்தான் இதில் சரியாக ரிபேட்டு எவ்வளவு என்று கண்டு பிடிப்பதில் கஷ்டம் ஏற்படுகின்றது.

SRI K. VINAYAKAM : Were any instances brought to the notice of the Hon. Minister about the payment of rebates that are pending in the areas transferred to our State, viz., Tiruttani taluk, and if so, may I know what action the Government are going to take to see that the amount is paid by the Andhra Government to the Weavers' Co-operative Society in Tiruttani ?

THE HON. SRI R. VENKATARAMAN : So far, we have no information that there has been any mistake or fraud in the claim with regard to the new areas transferred to us. If there has been any delay, it must be the natural, usual delay that occurs in the payment. The Government will look into it. If a separate question is put, the answer will be furnished.

SRI A. GOVINDASAMY : திருக்கோவிலூரிலுள்ள சொஸைட்டியில் 1957-ல் ஜூலையில் விசாரணை ஆரம்பித்து 1958-ல் முடிந்திருக்கிறது. இந்த கால தாமதத்திற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு தனியாக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[14th April 1960

SRI A. MARIAPPAN : 1959-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குப் பிறகு ரிபேட் கொடுக்கப்படாமல் இருக்கும் சங்கங்களுக்கு உடனடியாக கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : அது வேறு பிரச்னே. இதற்கு மத்திய சர்க்காரிலிருந்து ஒரு கோடி ரூபாய் நமக்கு வரவேண்டி யிருக்கிறது. அது ஏப்ரல் மாதத்திற்குள் வந்து விடும் என்று மத்திய சர்க்காரிலிருந்து எழுதியிருக்கிருர்கள். அது கிடைத்ததும் பட்டுவாடா செய்யப்படும்.

MR. SPEAKER : To-day, the Hon. the Minister for Electricity wants postponement of some of his questions. In the list of questions for to-day, six questions for which answers have not been received for over six months have been included. The departments concerned were reminded, but they seem to think that it is not necessary to reply or have ignored my requests. There was, therefore, no other option but to place before the House these six questions. This I have done to-day. I may inform the House that this morning I got replies for all these questions. I once again take this opportunity to request Hon. Ministers to see that the departments concerned expedited the despatch of the answers within the scheduled time or at least they took one extention of time from the Speaker.

Rural electrification

* 661 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959–60 வருடத்தில் அபிவிருத்தித் தொகுதிகளில் மின்சாரத் திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) அதை எப்படி செலவு செய்யப்படவேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது ?

(இ) எத்தனே தொகுதிகளில் இத்தொகை செலவிடப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) A sum of Rs. 40.5 lakhs was set apart for rural electrification in Community Development Blocks in the First and Second Five-Year Plans. The State Electricity Board has also spent some amount for rural electrification in the Community Development Blocks, the details of which are being collected.

(*b*) The field officers of the Madras State Electricity Board have been instructed to evolve as many remunerative proposals as possible under top priority for electrification of villages in Community Development Blocks. Sanctioned schemes are being taken up for execution under top priority. Necessary instructions have also been issued to the field officers to spend the maximum amount possible in the Blocks without leaving room for default and their progress is also being watched periodically. The State Electricity Board has also been permitted to make inter-block diversion of the amounts earmarked for particular blocks, with the permission of the Government of India and the Block Advisory Committees concerned.

(*c*) 40 blocks.

SRI P. G. MANICKAM : ஸார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எந்தெந்த இடங்களிலே மின்சார வசதி செய்யப்படவேண்டு மென்று ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்புப் பிரகாரம் அந்தந்த பிளாக்கிலே வேலேகள் செய்யப்பட்டிருக்கிறதா ? அல்லது பூர்த்தி